## பயிற்சி வினாக்கள்

1. இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவியவர் யார்?

   (1) பாபர் (2) ஹுமாயூன் (3) அக்பர் (4) ஷெர்ஷா

2. முதல் பானிப்பட் போரில் லோடி வம்ச கடைசி மன்னர் ______, காபூல் மன்னன் ______ போரிட்டனர்.

   (1) இப்ராஹிம் லோடி, ஷெர்ஷா (2) திலாவார்கான் லோடி, பாபர்

   (3) இப்ராஹிம் லோடி, பாபர் (4) திலாவார்கான் லோடி, ஹுமாயூன்

3. முதல் பானிப்பட் போர் நடைபெற்ற ஆண்டு ______.

   (1) 1524 (2) 1526 (3) 1528 (4) 1556

4. இரண்டாம் பானிப்பட் போர் நடைபெற்ற ஆண்டு ______.

   (1) 1526 (2) 1528 (3) 1556 (4) 1558

5. பாபரின் மூத்த மகன் ______.

   (1) ஹுமாயூன் (2) அக்பர் (3) ஜஹாங்கீர் (4) ஷாஜகான்

6. கூற்று: ஹுமாயூன் 1555 இல் மீண்டும் டெல்லியைக் கைப்பற்றினார்.

   காரணம்: பாரசீக அரசர், சபாவிட் வம்ச ஷா-தாமஸ்ப் உதவியதால் ஹுமாயூன் டெல்லியைக் கைப்பற்றினார்.

   (1) கூற்று சரி, காரணம் தவறு. (2) கூற்று தவறு, காரணம் சரி.

   (3) கூற்றும் காரணமும் சரி, கூற்று காரணத்தை விளக்குகிறது.

   (4) கூற்றும் காரணமும் சரி, கூற்று காரணத்தை விளக்கவில்லை.

7. ______ நில வருவாய் முறையையும், நாணயங்களையும் அறிமுகம் செய்தார்.

   (1) ஷெர்ஷா (2) அக்பர் (3) பாபர் (4) ஷாஜகான்

LIVEWORKSHEETS

8. அக்பர் தனது ______ ஆம் வயதில் அரசரானார்.

(1) 11 (2) 12 (3) 13 (4) 14

9. அக்பரின் பகர ஆளுநர் ______.

(1) ஜஹாங்கீர் (2) ஷெர்ஷா (3) ஹுமாயூன் (4) பைராம்கான்

10. அக்பருடன் ஹால்டிகாட் போரில் போரிட்டவர் ______.

(1) ராணா உதய்சிங் (2) ராணா பிரதாப் (3) ஹெமு (4) பைராம்கான்

11. இந்துக்களின் மீதான புனிதப் பயண வரியையும், முஸ்லீம் அல்லாதோர் மீதான ஜிஸியா வரியையும் நீக்கியவர் ______.

(1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

12. ஜிஸியா வரியையும், புனிதப்பயண வரியையும் மீண்டும் விதித்தவர் ______.

(1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

13. சூபி துறவியான சலீம் சிஸ்டியும், சீக்கிய குருவான ராம்தாசும் ______ ன் அளவில்லா மதிப்பையும், மரியாதையையும் பெற்றிருந்தனர்.

(1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

14. சரியான வரிசைப்படி உள்ளனவற்றை கண்டுபிடி

(1) பாபர், அக்பர், ஷாஜகான், ஜஹாங்கீர், ஹுமாயூன்

(2) பாபர், அக்பர், ஹுமாயூன், ஜஹாங்கீர், ஷாஜகான்,

(3) பாபர், ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜகான்,

(4) பாபர், ஹுமாயூன், அக்பர், ஷாஜகான், ஜஹாங்கீர்

15. சரியான இணையைக் கண்டுபிடி.

(1) பாபர் - இரண்டாம் பானிப்பட் போர்

(2) அக்பர் - தீன் இலாஹி

(3) ஹுமாயூன் - நாணயங்கள் அறிமுகம்

LIVEWORKSHEETS

(4) ஷெர்ஷா - தாஜ்மஹால்

16. பதேப்பூர் சிக்ரியில் அக்பரால் கட்டப்பெற்ற ______ என்னும் மண்டபத்தில் அனைத்து மதங்களின் அறிஞர்களும் ஒன்று கூடி உரையாடினர்.

(1) இபாதத்கானா (2) ஜும்மா மசூதி (3) செங்கோட்டை (4) புராணகிலா

17. அக்பரின் அவையில் இடம் பெற்றிருந்த பாடலாசிரியரும், இசை மேதையுமானவர் ______.

(1) பீர்பால் (2) அபுல் பாசல் (3) அபுல் பைசி (4) தான்சேன்

18. சரியானவற்றை கண்டுபிடி:

i. அக்பர் அவையில் கதையாசிரியராக பீர்பால் இருந்தார்.

ii. அக்பர் சீக்கிய மதத் தலைவர் குரு அர்ஜுன் சிங்கை தூக்கிலிடும்படி உத்தரவிட்டார்.

iii. அக்பரின் ஆட்சியில் ராஜா தோடர்மால், ராஜா மான்சிங், ராஜா பகவன் தாஸ் போன்ற திறமையான அதிகாரிகள் இருந்தனர்.

iv. அக்பர் மத்திய இந்தியப் பகுதி ராணி துர்காவதியையும், அகமது நகர் சந்த் பீவியையும் தோற்கடித்தார்.

(1) i, ii, iii, iv சரி (2) i, ii, iv சரி (3) i, iii, சரி (4) ii, iii, iv சரி

19. அக்பரின் ராஜபுத்திர மனைவிக்கு பிறந்த ஜஹாங்கீரின் இயற்பெயர் ______.

(1) குர்ரம் (2) ஜாகிருதீன் (3) சலீம் நூருதீன் (4) ஆலம் கீர்

20. ஜஹாங்கீர் என்றால் ______ என்று பொருள்.

(1) உலகத்தைக் கைப்பற்றியவர் (2) உலகை வென்றவர்

(3) உலகின் அரசன் (4) எதுவுமில்லை

21. ஷாஜகான் என்ற பெயரின் பொருள் ______.

(1) உலகத்தைக் கைப்பற்றியவர் (2) உலகை வென்றவர்

(3) உலகின் அரசன் (4) எதுவுமில்லை

LIVEWORKSHEETS

22. ஆலம்கீர் என்ற பட்டப்பெயரின் பொருள் ______.

(1) உலகத்தைக் கைப்பற்றியவர் (2) உலகை வென்றவர்

(3) உலகின் அரசன் (4) எதுவுமில்லை

23. தமக்கு எதிராக கலகம் செய்த தனது மகன் குஸ்ருவுக்கு ஆதரவாக செயல்பட்ட சீக்கியத் தலைவர் குருஅர்ஜுன் சிங்கை தூக்கிலிடும்படி உத்திரவிட்டவர்

(1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

24. ஜஹாங்கீர் ஆட்சிக்காலத்தில் ______ நாட்டின் அரசர் முதலாம் ஜேம்ஸின் பிரதிநிதி டெல்லிக்கு வருகை புரிந்தார்.

(1) அமெரிக்கா (2) பிரான்ஸ் (3) டென்மார்க் (4) இங்கிலாந்து

25. ஆங்கிலேயரின் முதல் வணிக மையம் நிறுவப்பட்ட இடம் ______.

(1) டெல்லி (2) கொச்சின் (3) சூரத் (4) மசூலிப்பட்டிணம்

26. ஷாஜகானின் இயற்பெயர் ______.

(1) குர்ரம் (2) ஜாகிருதீன் (3) சலீம் நூருதீன் (4) ஆலம்கீர்

27. ______ ஆட்சிக் காலத்தில் முகலாயர்களின் புகழ் உச்சத்தை எட்டியது.

(1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

28. முகலாய மாமன்னர்களில் கடைசி திறமையான அரசர் ______.

(1) அக்பர் (2) ஜஹாங்கீர் (3) ஷாஜகான் (4) ஔரங்கசீப்

29. சரியான இணையைக் கண்டறி.

(1) ஷெர்ஷா - புராணகிலா (2) அக்பர் - செங்கோட்டை

(3) ஜஹாங்கீர் - தாஜ்மஹால் (4) ஷாஜகான் - இபாதத்கானா

30. பொருந்தாததைக் கண்டறி

(1) பாபர் (2) ஹுமாயூன் (3) ஷெர்ஷா (4) அக்பர்

LIVEWORKSHEETS

31. சரியான கூற்றுகளைக் காண்க.

i. ஷாஜகான் தம் வாழ்நாளின் இறுதி 8 ஆண்டுகளை ஒரு கைதியாக கழித்தார்.

ii. ஷாஜகான் சமய சகிப்புத்தன்மையற்றவராக விளங்கினார்.

iii. ஷாஜகான் ஜிஸியா வரியை மீண்டும் விதித்தார்.

iv. ஷாஜகானின் இயற்பெயர் குர்ரம்.

(1) i, ii, iii, iv சரி (2) i, ii, iii சரி (3) i, ii, iv சரி (4) ii, iii, iv சரி

32. கூற்று: முஸ்லீம் மதத்தைத் தவிர ஏனைய மதங்களை ஔரங்கசீப் சகித்துக் கொள்ளவில்லை.

காரணம்: ஔரங்கசீப் இந்துக்களின் மீது மீண்டும் ஜிஸியா வரியை விதித்தார்.

(1) கூற்று சரி, காரணம் தவறு (2) கூற்றும் காரணமும் சரி

(3) கூற்றும் காரணமும் சரி, கூற்று காரணத்தை விளக்கவில்லை

(4) கூற்றும் காரணமும் சரி, கூற்றிற்கான சரியான விளக்கம்

33. தவறான இணையைக் கண்டறி.

| | தந்தை | | மகன் |
|---|---|---|---|
| (1) | பாபர் | - | ஹுமாயூன் |
| (2) | அக்பர் | - | ஜஹாங்கீர் |
| (3) | ஷாஜகான் | - | ஜஹாங்கீர் |
| (4) | ஷாஜகான் | - | ஔரங்கசீப் |

34. ஔரங்கசீப் ஆட்சியில் பிரெஞ்சுக்காரர்கள் வணிக மையத்தை ______ ல் நிறுவினார்கள்.

(1) கொச்சின் (2) பாண்டிச்சேரி (3) சூரத் (4) தரங்கம்பாடி

35. மராட்டிய பேரரசர் ______ ன் எழுச்சியை ஔரங்கசீப்பால் தடுக்க இயலவில்லை.

(1) சிவாஜி (2) சாம்பாஜி (3) இளவரசர் அக்பர் (4) சலீம்

LIVEWORKSHEETS